# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி

முதல்பக்கத் தொடர்ச்சி

அத்தகைய நெருக்கடிக்கு இடையிலும், பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான பல புதுமையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும், வாசிப்பு இயக்கம், மாவட்டம்தோறும் மாதிரிப் பள்ளிகள், 28 மாவட்டங்களில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே கற்றல் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கான தகைசால் பள்ளிகள், மாணவச் செல்வங்களின் கலை ஆற்றலை இனம் கண்டறிந்து ஊக்குவிப்பதற்காகப் பள்ளிகளில் கலைத்திருவிழா நடத்தி வெற்றி பெறும் மாணவர்களுக்கு விருதுகளை வழங்குதல், அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 519.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் 455.32 கோடி ரூபாய் செலவில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் எனப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

**அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய கற்பித்தல் முறை!**

இவற்றில், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களைச் சிறப்பு பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் கண்டு, அவர்களுக்கென நலம் நாடி செயலி வடிவமைக்கப்பட்டுத் தக்க சிறப்புக் கல்வி வழங்குவது உள்ளிட்ட திட்டங்களின் மூலம் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய கற்பித்தல் முறையாகப் பள்ளிக் கல்வியை மேம்படுத்துவது மிகச் சிறப்பான ஒரு திட்டமாகும்.

ஆசிரியப் பெருமக்களின் தேவைகளை உணர்ந்த அரசு இந்த அரசு. அதனால், 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு 81 கோடி ரூபாய் செலவில் கைக் கணினிகள் (Tablet), அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பொது மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நிரவல் கலந்தாய்வு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு இணைய வழியில் EMIS மூலம் நடத்துதல், 14,019 ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மூலம் நியமனம் செய்ய ஆணை, கற்றல் கற்பித்தல், ஆசிரியர் திறன்மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகனார் பெயரில் விருது,

**ஆசிரியர்களுக்கான திட்டங்களை குறைவின்றி நிறைவேற்றுகிறோம்!**

அரசுப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்விச் செலவினத்திற்கான உதவித் தொகை 50,000 ரூபாயாக உயர்வு, ஆசிரியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை செய்வதற்கான திட்டம் என, ஆசிரியர்களுக்கான திட்டங்களையும் குறைவின்றி நிறைவேற்றி வருகிறோம். மாணவச் செல்வங்கள், ஆசிரியப் பெருமக்களுக்கான 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களின் பட்டியல் மிக நீளமானது. அவற்றில் சிலவற்றை மட்டுமே தலைப்புச் செய்திகளாக சுட்டிக் காட்டி யுள்ளேன்.

மாணவர் நலனையும், ஆசிரியர் நலனையும் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை இரண்டு கண்களெனப் போற்றிச் செயலாற்றி வருகிறது. பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் இன்னும் வளரும்... தொடரும் என்று கூறி, புதிதாக பணியேற்கும் இடைநிலை ஆசிரியப் பெருமக்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வாழ்த்துச் செய்தியை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விழா மேடையில் பெரும் கரவொலிக்கிடையே வாசித்தார்.

# சென்னை - தஞ்சைக்கு 'வந்தே பாரத்' ரயில் இயக்கப்படுமா?

## நாடாளுமன்றத்தில் எஸ்.முரசொலி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25 -

இந்திய ஒன்றிய அரசுக்கு தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வந்தே பாரத் விரைவு வண்டியை (Vande Bharah Express) இயக்கும் திட்டம் உள்ளதா என்று தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி கேள்வி எழுப்பியுள்ளார்.



ஒன்றிய அரசின் ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் இந்த கேள்வியை எழுப்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர், பயன்படுத்த படாத அம்ரிட் பாரத் பெட்டிகள் தென்னக ரயில்வேக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் கேட்டுள்ளார்.

இதற்கு பதில் அளித்துள்ள அமைச்சர், தற்பொழுது பத்து ஜோடி ரயில் சேவைகள் தஞ்சாவூர் சென்னை மார்க்கத்தில் இயக்கப்படு கிறது என்றும், 12 வந்தே பாரத் ரயில்கள் சென்னை பகுதியில் இயக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பதினான்கு அம்ரிட் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவைகளில் 8 சேவைகள் ஜூலை 18 முதல் இயங்குகின்றன.

ரயில் சேவைகள், டிராபிக், தேவை முதலியவற்றைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

## செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலத்தில்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்! செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

## ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

செஞ்சி, ஜூலை 25 -

செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்சி தம்பரத்தில் கடந்த 15 ஆம் தேதி முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம்முகாம் நடைபெற்றது

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி செயலர் நடராஜன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் அபர்ணா ரவிசங்கர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். முகாமில் புலிப்பட்டு, சோ.குப்பம், சத்தியமங்கலம் ஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொது மக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செஞ்சி மேற்கு ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன். வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றியக் கவுன்சிலர்கள் டிலைட் ஆரோக்கிய ராஜ், புவனா செந்தில் குமரன், கேமல், ஊராட்சி மன்ற தலைவர்கள் சோ.குப்பம் ராஜேந்திரன், புலிப்பட்டுகீதா உள்ளிட்டதுறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் நன்றி கூறினார்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் தொகுதியில் 1.50 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதியாக செக்கானூரணியில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். உடன் கழக நிர்வாகிகள் கொ.தனபாண்டியன், ஏர்போர்ட் பாண்டியன், முத்துராமன், லதா அதியமான், டிஸ்கோ அலாவுதின், சிவனாண்டி, ரம்யா முத்துக்குமார், மதன்குமார், ஜெயச்சந்திரன், சுதாகரன், ராமமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

# கல்விப்பணிக்கு கோயில் நிதி ! – ஒரு பார்வை

கோயில் நிதியைக் கல்லூரிகள் கட்டப் பயன்படுத்துவது தொடர்பான சர்ச்சை அண்மையில் தமிழ்நாட்டில் தலைதூக்கி இருக்கிறது. அரசியல் விவாதங்களைக் கடந்து, சமயத்தோடு தொடர்புடைய மதச்சார்பற்ற நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் தனித்துவம் கொண்ட சமூகநீதி மாதிரியின் மீது இந்த பிரச்சினை வெளிச்சம் பாய்ச்சுகிறது. அன்றைய சென்னை மாகாணத்தில் உருவாகிய இந்த சமூகநீதி 'மாடல்', 200 ஆண்டுகள் பழமைகொண்ட சட்டக் கட்டமைப்பிலிருந்து ஊக்கம் பெற்று இன்று வரை தொடர்கிறது. இந்த 'மாடல்' தென்னிந்தியாவில் பெரும் ஏற்பையும் பெற்றுள்ளது.



Temples of social justice

Recently, a political controversy erupted in Tamil Nadu on the issue of diverting temple funds for building colleges. Beyond the political debates, the issue throws light on a unique social justice model around the regulation of secular practices associated with religion. This model, predominantly developed in the erstwhile Madras Presidency, draws strength from a

Manuraj Shunmugasundaram

Advocate practising before the High Court of Madras and DMK spokesperson

Endowments Act. When it was introduced in the Madras Legislative Council, it faced opposition, mainly due to the provision in the law that allowed surplus temple funds to be diverted for other purposes.

The nub of the issue was whether funds provided to a temple could be used for secular purposes. The matter was debated and settled in 1925, when the law

and upheld by constitutional courts. Among the permissible uses of surplus funds under the 1959 Act is the establishment and maintenance of universities or colleges (Section 66). These educational institutions are also required to make available the study of the Hindu religion or Hindu temple architecture. Seen within this framework, building colleges from temple funds is not

1817-ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி, மத அறக்கட்டளைகள் மற்றும் அரசு வசமான சொத்துகள் ஒழுங்குமுறை (Religious Endowment and Escheats Regulation) மூலம், மத நன்கொடைகளை ஒழுங்குபடுத்தும் ஆரம்பகாலக் கட்டமைப்பை ஏற்படுத்தியது. 1858-இல் பிரிட்டிஷ் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இந்தியப் பகுதிகள் வந்த போது, விக்டோரியா மகாராணி மத விவகாரங்களில் அரசின் தலையீட்டைக் கட்டுப்படுத்திக் கொள்வதாக அறிவித்தார். 1857-ஆம் மதப்பிரச்சினைகளால் மூண்ட சிப்பாய்க் கலகம் இத்தகைய தற்காப்பான முடிவை எட்டக் கட்டாயப்படுத்தியது.

இருப்பினும் மத விவகாரங்களில் இருந்து பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னை முழுமையாக விலக்கிக் கொள்ளவில்லை. மத நன்கொடைகளை தொடர்ந்து மேற்பார்வையிட வேண்டுமென்று சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இறுதியாக, இவ்விவகாரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு சமநிலை கொண்ட முடிவை எட்டியது: மதச் சடங்கு மற்றும் வழிபாடு போன்ற அடிப்படை நடைமுறைகளில் அரசு தலையிடாது எனவும்; ஆனால் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் மற்றும் இதர மதம்சாரா அம்சங்களை கட்டுப்படுத்தும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம்**
**கழக செய்தித் தொடர்பாளர்**
**அயலக அணி இணைச் செயலாளர்**

அரசாங்கம் கோயில் நிறுவனங்களை மேற்பார்வையிடும் என்ற கருத்து 1920-இல் நீதிக்கட்சி ஆட்சியில் உறுதிபெற்றது. நீதிக்கட்சியின் முதல் சட்டப்பூர்வத் தலையீடாக 1922-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டமுன்வடிவைக் கொள்ளலாம். சென்னை மாகாண சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டபோது இம்மசோதா பலத்த எதிர்ப்பைச் சந்தித்தது, காரணம் உபரியான கோயில் நிதியை மற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம் என்று இச்சட்டம் கோரியது.

பிரச்சினையின் மையம், கோயிலுக்கு வழங்கப்பட்ட நிதிகளை மதச்சார்பற்ற நோக்கங்களுக்காகச் செலவிட முடியுமா, என்பதாக இருந்தது. இவ்விவகாரம் விவாதிக்கப்பட்டு, 1925-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டபோது தீர்க்கப்பட்டது. அதிலிருந்து தற்போது அமலில் இருக்கும் சட்டம் வரை (இந்து சமய அறநிலையத்துறை சட்டம், 1959) உபரி நிதியை ஏனைய காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்ற ஏற்பாட்டைத் தக்கவைத்து கொண்டே இருக்கின்றன.

1959-ஆம் ஆண்டு இச்சட்டத்தின் பிரிவு 36, மத நிறுவனங்களின் அறங்காவலர்கள், ஆணையரின் முன் அனுமதியுடன், சட்டத்தில் பட்டியலிடப்பட்ட எந்தவொரு நோக்கத்திற்கும் உபரி நிதிகளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. இங்கு, 'உபரி' என்பது கோயிலின் பராமரிப்பு மற்றும் அதன் அலுவலர்களின் பயிற்சிக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகு மீதமுள்ள தொகையைக் குறிக்கிறது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லாத சூழல்களிலும், ஏனைய காரியங்களுக்கு நிதிகளை பயன்படுத்த இணை ஆணையர் அல்லது துணை ஆணையருக்கு உரிய உரிமையை இச்சட்டம் வழங்குகிறது.

கோயில்களுக்கு வழங்கப்படும் கொடை என்பது நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது. சோழப் பேரரசு உச்சத்தில் இருந்த பொ.ஆ. 970-இல் இருந்தே அரசாங்கத்திடம் இருந்து பெரிய அளவிலான நன்கொடைகளைப் கோயில்கள் பெற்று வந்துள்ளன. வரலாற்றாசிரியர் அனிருத் கனிசெட்டி, சோழ அரசியான செம்பியன் மாதேவி, நிலமும் பொருட்களுமாக கோயில்களுக்குத் திட்டமிட்டு நன்கொடை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். இந்த வழக்கம் விஜயநகர ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்துள்ளது.

கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமில்லாமல் சமூகப் பண்பாட்டு மையங்களாகவும் திகழ்ந்துள்ளன. கல்விசார் செயல்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோயில் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளும், கல்வி மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்ட பரந்த மண்டபங்களும் இந்தக் கூற்றை உறுதிப்படுத்துகின்றன. எனவே, கோயில்களின் மூல நோக்கம் கல்வி மற்றும் கலாச்சாரப் பணிகளுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதாகவே இருந்துள்ளது.

1959-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டம், நீதிமன்றங்களால் சட்டரீதியாக ஆராயப்பட்டு ஒப்புதல் பெற்ற ஒன்றாக இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ் (பகுதி 66) கோயில் உபரி நிதிகளைப் கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் நிறுவவும்; அவற்றைப் பராமரிக்கவும் பயன்படுத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனங்கள் இந்து சமயம் அல்லது கோயில் கட்டடக் கலை தொடர்பான பாடப்பிரிவுகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கோயில் நிதியைக் கல்வி நிறுவனங்களை உருவாக்கப் பயன்படுத்துவது சட்டபூர்வமானது மட்டுமல்ல இந்த சட்டப் பிரிவுகளின் தர்க்கப்பூர்வமான நீட்சியாவும் உள்ளது.

**சமூகநீதி மரபு:**

கோயில் நிதி தொடர்புடைய இந்தச் சர்ச்சையை வெறும் சட்டம் சார்ந்து மட்டும் சுருக்கிவிடமுடியாது, இது சமூக அரசியல் மற்றும் கோட்பாடு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. காலனியத்துக்கு முந்தைய கால அரசுகள் பெரிய அளவிலான நன்கொடைகளை ஆதரிக்க, அரசு வளங்களைக் கொண்டு முக்கியமான நலத்திட்டங்களைச் செயல்படுத்தக் கோயில்கள் வழி கோலியதே காரணமாக இருந்தது. காலனிய காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரிட்டிஷ் பேரரசும் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் உள்ளூரில் அதிகாரத்தை நிறுவவும் கோவில் நிதியை அரசு பராமரிப்பதை அவசியமான ஒன்றாக கருதினர்.

கடந்த நூற்றாண்டில் சென்னை மாகாணத்தில் உருவெடுத்த சுயமரியாதை இயக்கம் கோயில்களின் ஒழுங்குமுறையையும் அதன் வளங்களை நிர்வகிப்பதையும் சாதி எதிர்ப்பு சீர்திருத்தங்களைச் செயல்படுத்த முக்கியமான ஒன்றாக கருதியது. அப்படி இல்லாமல் போயிருந்தால், 1936 மற்றும் 1947-ஆம் ஆண்டுகளில் கோயில் நுழைவுச் சட்டங்களை இயற்றியிருக்கவே முடியாது. நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களுக்குப் பிறகே தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற சில மாநிலங்கள் பிற்படுத்தப்பட்ட சாதிகளில் இருந்து அர்ச்சகர்களை நியமித்துள்ளன.

இறுதியாக, கோயில் விவகாரங்களில் அரசு தலையீடு கூடாது என்ற வாதங்கள் சமூகநீதியின் அடித்தளத்தின் மீதான தாக்குதலாகவே அமையும். உபரி நிதிகளைச் சட்டப்பூர்வமான விதத்தில் ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுத்துவதை அரசின் தலையீடே உறுதி செய்யமுடியும். இதனை மாற்ற முயல்வது, தென்னிந்திய மாநிலங்கள் முன்னெடுத்த சமூகநீதி மற்றும் மதச் சீர்த்திருத்தங்களின் நீண்ட பாரம்பரியத்துக்குப் பின்னடைவாகவே அமையும்.

( நன்றி – தி இந்து )
(21.07.2025)

## பள்ளிப்பாளையத்தில் சிறுநீரக விற்பனை பிரச்சினை!

# மருத்துவமனைகளின் உரிமம் நிறுத்தி வைப்பு!

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை!

சென்னை, ஜூலை 25-

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் சிறுநீரகம் விற்றதாக வந்த செய்தியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முதற்கட்ட விசாரணை அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டி ருப்பதாவது: -

தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை செய்திகளில் வரப்பெற்ற முறைகேடான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை குறித்து விசாரித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.எஸ். வினீத், அவர்களை நியமித்து 18.07.2025 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.எஸ்.வினீத், மரு.இரா. ம. மீனாட்சிசுந்தரி, இணை இயக்குநர் (சட்டம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை, மரு.ஏ. ராஜ்மோகன், இணை இயக்குநர் நலப்பணிகள் நாமக்கல், மரு.கே. மாரிமுத்து, இணை இயக்குநர் நலப்பணிகள் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டம், சீத்தாராமன், காவல் துணை கண்காணிப்பாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை ஆகியோர் அடங்கிய குழு தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரிவான விசாரணை மேற்கொண்டனர்.

இவ்விசாரணையின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணை அறிக்கையினை மரு.எஸ்.வினீத், அரசுக்கு அனுப்பியுள்ளார். அந்த முதற்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி ஆகிய மருத்துவமனைகளுக்கு மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 பிரிவு 16 உட்பிரிவு (2) ன்படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள வழங்கப்பட்ட உரிமம் பொதுமக்கள் நலன் கருதி தற்காலிகமாக நிறுத்தி வைக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.